**போரதீவுப்பற்று பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போரதீவுப்பற்று பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான போரதீவுப்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,175,828 பெறுமதியான களஞ்சியப் பொருட்களின் இறுதி இருப்பு பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டு கணக்குகளிற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | களஞ்சிய இறுதி இருப்புக்களை சொத்துக்களாக கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட 31 வகையான 231 பொருட்களின் கிரயப் பெறுமதி மற்றும் தொலைந்தவையாக அடையாளப்படுத்தப்பட்ட 5,147 புத்தகங்களின் பெறுமதி சொத்துக்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளிலிருந்து சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றப்பட்ட மற்றும் தொலைந்த சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 11 நூலகங்களுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 555,598 பெறுமதியான 1,316 புத்தகங்களும் மற்றும் விலை குறிப்பிடப்படாத 1,435 புத்தகங்களும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நன்கொடையாக புத்தகங்களின் பெறுமதி சொத்துக்களாக கணக்குகளில் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நன்கொடைப் புத்தகங்களின் பெறுமதி சொத்துக்களாக கணக்குகளில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 48,538,599 பெறுமதியான 05 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துப் பூர்வ ஆதாரம் பெறப்பட்ட சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட போதிலும் அதன் உண்மையான பெறுமதியை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக் கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

---

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009 மற்றும் கடிதம் 03/2017(L). | சபையின் நீர்வழங்கல் பிரிவில் கடமையாற்றும் வேலை மேற்பார்வையாளர் ஒருவர் மற்றும் 02 ஊழியர்கள் தங்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை விரலடையாளப் பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | குறித்த ஊழியர்களுக்கு எமது பிரதான அலுவலகத்தில் விரல் அடையாளப் பதிவு இயந்திரத்தினை பயன்படுத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர்கள் வரவானது விரலடையாளப் பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

---

**2.1 நிதி விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 11,206,294 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,840,744 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

---

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன**

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,500,000 | - | - | - | 1,200,000 | - | - | - |
| வாடகை | 3,049,700 | 2,280,751 | 1,390,200 | 890,551 | 1,930,000 | 888,000 | 764,850 | 436,152 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,860,000 | 1,504,435 | 1,504,435 | - | 1,905,000 | 1,080,625 | 1,080,625 | - |
| ஏனைய வருமானம் | 7,375,000 | 11,925,773 | 10,019,913 | 1,905,860 | 19,865,000 | 45,333,421 | 42,381,478 | 2,969,842 |
| | 13,784,700 | 15,710,959 | 12,914, 548 | 2,796,411 | 24,900,000 | 47,302,046 | 44,226, 953 | 3,405,994 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | 2013 ஆகஸ்ட் 31ஆந் திகதிய 1826 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 12 கிராம சேவையாளர் பிரிவுகள் அபிவிருத்தி அடைந்த கிராமங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பிரதேசங்களிலுள்ள ஆதனங்களை மதிப்பிட்டு வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கை 10 வருடங்களுக்கு மேலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைத்த பின்னர் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது | சபையின் வருமானம் முழமையாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான குத்தகை வருமான நிலுவைத் தொகையான ரூபா 271,091 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலங்களில் நிலுவைகளை அறவிடுவதற்கும், அதனை செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன முறையே ரூபா 11,622,690 மற்றும் ரூபா 9,685,627 ஆகும். | 2024ஆம் ஆண்டில் அறவிடப்படும். | முத்திரைக் கட்டண மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 460,000 பெறுமதியான சூரியதகடு, அதனோடு இணைந்த மின்கலம் மற்றும் யானைவேலி அமைத்தலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் விவேகானந்தபுர திண்மக்கழிவு நிலையத்தில் களவாடப்பட்டிருந்தும் இது தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 101 முதல் 110 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் சபையினால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | களவாடப்பட்டமை தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நிதிப்பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அரச நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், நட்டம் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த 03 வருடங்களிற்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்பட்டிருந்த உழவு இயந்திரம் மற்றும் நீர்த்தாங்கியினை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்க்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உழவு இயந்திரமானது PSDG திட்ட நிதி வசதி கிடைத்ததும் திருத்தமானது மேற்கொள்ளப்படும். | உழவு இயந்திரம் மற்றும் நீர்த்தாங்கியினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 20 வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கும் மற்றும் அதன் பெறுமதிகளினை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,082,500 பெறுமதியான மல்டி சொப்பர் இயந்திரம் மற்றும் சுழலும் வடிகட்டி இயந்திரங்களினை திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்க்கு 02 ஆண்டுகளாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு யானை வேலி அமைத்து பாதுகாப்பினை ஏற்படுத்திய பின்னர் பசளை தயாரிக்கின்ற செயற்பாட்டினை மேற்கொள்ளமுடியும். | மல்டி சொப்பர் இயந்திரம் மற்றும் சுழலும் வடிகட்டி இயந்திரங்களினை திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படுகின்ற 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | இது தொடர்பாக உயர்மட்ட நிர்வாகத்தினருக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | சபையினால் 06 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பில் உரியவர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 503,195 தொகையினை 13 வருட காலமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விபரங்களற்ற இப்பணியாளர்கள் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக பதிவழிக்கப்படவுள்து.. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 01ஆந் திகதியிடப்பட்ட 1534/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) இல்லாதொழியும் நாளிலிருந்து 03 மாத காலத்திற்கு முன்னர் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்க வேண்டும். எனினும், 31 எண்ணிக்கையான நிறுவனங்கள் உரிமம் காலாவதியாகியும் உரிமத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. | அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்துக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடப்படுமெனவும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |